# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2288/22 - 2022 ජූලි මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.07.14

*2288/22 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *(40 ஆவது அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்*

*16 ஆவது பிரிவின் கீழான ஊரடங்குச் சட்ட உத்தரவு*

இங்கு அட்டவணையில் குறிப்பாகக் குறிப்பிட்டுள்ள பிரதேசங்களில் பொது மக்கள் ஒழுங்கினைப் பேணிவருதல் கட்டாயமானதென என்னால் கருதப்படுவதனால், (40 ஆவது அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 16 ஆவது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், பிரதம அமைச்சர், அரசியலமைப்புச் சட்டத்தின் 37(1) ஆம் பிரிவின் பிரகாரம் சனாதிபதி அவர்களினால் வழங்கப்பட்ட நியமனத்திற்கு அமைய, ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், செயலாளர், பாதுகாப்பு அமைச்சு அல்லது செயலாளர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அல்லது பொலிஸ்மா அதிபர் அல்லது அவர்களினால் அதிகாரமளிக்கப்படுகின்ற யாதேனுமொரு அலுவலரினால் வழங்கப்படுகின்ற எழுத்துமூல அனுமதிப் பத்திரத்தின் அதிகாரத்தின் கீழன்றி, 2022, யூலை மாதம் 14 ஆந் திகதி 12.00 மணித்தியாலம் முதல் 2022, யூலை மாதம் 15 ஆந் திகதி 05.00 மணித்தியாலம் வரையில் எந்தவொரு நபரும் யாதேனுமொரு பொதுப் பாதையொன்றில், புகையிரதப் பாதையொன்றில், பொது பூங்காவொன்றில், பொது விளையாட்டு மைதானமொன்றில் அல்லது வேறு பொது இடமொன்றில் அல்லது அப்பிரதேசங்களிலுள்ள கடற்கரையில் இருத்தலாகாது என இந்த உத்தரவின் ஊடாக கட்டளை இடுகின்றேன்.

**ரணில் விக்கிரமசிங்க,**
பிரதம அமைச்சர்.
அரசியலமைப்புச் சட்டத்தின் 37(1) ஆம் பிரிவின் பிரகாரம்
சனாதிபதி அவர்களினால் வழங்கப்பட்ட நியமனத்திற்கேற்ப

2022, யூலை மாதம் 14 ஆந் திகதி,
கொழும்பு.

**அட்டவணை**

கொழும்பு நிருவாக மாவட்டம் மற்றும் அந்த மாவட்டத்தை அண்டிய ஆள்புல நீர்ப்பரப்புகளும்

EOG 7 - *0068*


1A - G 37073 — 08 (2022/07)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*